# சமகால சுற்றுலாவில் பாரம்பரிய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் : அரியாலை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**மயூறிக்கா, செ., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mayoo.s026@gmail.com

*வட இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒரு அழகிய கிராமமே அரியாலை ஆகும். மருதம், நெய்தல், பாலை, முல்லை எனப் பண்டைய தமிழர் நிலவுடமைகளுடன் செழிக்கும் வயல்நிலம், கடற்கரையோரம், தென்னம் தோப்புக்கள், பனை மரக்காடுகள் போன்ற வளங்கள் நிறைந்திருக்கும் பிரதேசமே இதுவாகும். மரஅரிவு ஆலைகள் இருந்ததன் பின்னணியில் (அரிவு + ஆலை = அரியாலை) எனப் பெயர் பெற்றதாகவும், வைணவம் தழைத்தோங்கிய போது விஸ்ணு ஆலயம் இருந்ததன் காரணத்தினால் அரி என்பது விஸ்ணு என்பதை குறித்து நிற்கின்றதெனவும் (அரி + ஆலயம் = அரியாலையம்) என அழைக்கப்பட்டு "அம்" எனும் விகுதி மறைந்து பின்னாளில் அரியாலை என பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண தமிழரசர்கள் காலத்தில் வரலாற்று பெருமை மிக்கதொரு இடமாக இவ்விடம் காணப்பட்டதோடு அரசவழி தொடர்புகளும் போக்குவரத்துகளும் இப்பிரதேசத்தினூடாக இடம்பெற்றுள்ளதனை வரலாற்று இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்அரியாலைப் பிரதேசத்தில் பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளை அரியாலை பூம்புகார் பிரதேசத்தின் தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர்களால் பின்பற்றப்பட்ட மரபுகளே இன்று பாரம்பரியங்களாய் தோற்றம் பெற்றுள்ளன. தமிழ் மக்களுக்குரிய தனித்துவமான பாரம்பரியமான சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள் போன்றன தொன்று தொட்டு பண்டைய காலத்திலிருந்தே பேணப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தின் தனித்துவமான தொட்டுணர முடியாத மரபுரிமை அம்சங்களை உள்ளடக்கிய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் போன்றன இன்று முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. சமீப காலத்தில் அவை கைவிடப்பட்டு மாற்றமடைந்து அருகிச் செல்வதோடு, இவ்வளங்கள் சுற்றுலா நோக்கில் பார்க்கப்படவில்லை. இவ்வாய்வின் மூலம் இப்பிரதேசத்தின் தொட்டுணர முடியாத மரபுரிமைகளை ஆவணப்படுத்தி, பாதுகாப்பதற்கான வழிமுறை களையும் திட்டங்களையும் வகுக்க முடியும். மேலும் வட இலங்கை சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் நோக்கில் இங்குள்ள வளங்களினை மேம்படுத்துவது தொடர்பிலான தந்துரோபாயங்களை இனங்கண்டு கொள்ள முடியும்.*

**திறவுச்சொற்கள்:** அரியாலை பிரதேசம், சடங்குகள், சுற்றுலா, நம்பிக்கைகள்